**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.92/2022**
Prosecution: **PW6**

Deposition of the witness of **LW8**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.அசோகன் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.பழனி | Occupation | கட்டிட வேலை |
| Village /Area | சர்வந்தாங்கல் | Age | 35 |
| Taluk | ஆற்காடு | Aadhar card No. | 4284 2186 4604 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **05.03.2026.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் ஆற்காடு தாலுக்காவிலுள்ள சர்வந்தாங்கல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 3-ம் எதிரி கிரிவாசன் என்பவர் என் ஊரை சேர்ந்தவர். மற்ற இரண்டு எதிரிகளையும் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் இறந்து போன நாகேந்திரன் என் உடன் பிறந்த தம்பி ஆவார். அ.சா.1 ரகுவரன் என் ஊரை சேர்ந்தவர். 27.07.2021-ம் தேதி எங்கள் ஊரில் அம்மன் திருவிழாவின் போது இரவு 9.00 மணியளவில் சாமி ஊர்வலத்தில் எங்கள் ஊர்காரர்களும் நடனம் ஆடி சென்று கொண்டிருந்த போது நானும் அந்த ஊர்வலத்தில் இருந்தேன். அந்த நடன ஊர்வலத்தில் எங்கள் ஊர்காரர்களை தவிர வெளியூர் ஆட்களை எப்போதும் நடனம் ஆட அனுமதிப்பதில்லை. ஆனால் 27.07.2021-ம் தேதி நடந்த நடன ஊர்வலத்தில் வெளியூரை சேர்ந்த ஆஜர் எதிரிகளில் 1, 2 எதிரிகளும், மற்றொரு நபரும் நடனம் ஆடினார்கள். அவர்களை பார்த்து என் தம்பி நாகேந்திரன் வெளியூர்காரர்கள் நடனம் ஆட கூடாது என சொன்னார். அந்த நபர்கள் மது அருந்தியும், கஞ்சா போதையிலும் இருந்தனர். அவர்கள் என் தம்பி நாகேந்திரனை பார்த்து நீ யார் எங்களை ஆட கூடாது என சொல்வது என கேட்டுவிட்டு அவர்கள் தொடர்ந்து நடனம் ஆடினார்கள். பின்னர் ஊர்காரர்களும் அவர்களை பார்த்து நடனம் ஆட கூடாது என சொன்னதும் அவர்கள் அங்கிருந்து கொஞ்சம் தூரம் ஓடிச் சென்றுவிட்டார்கள். சாமி ஊர்வலத்திற்கு சற்று தூரத்தில் எங்கள் ஊர் பேருந்து நிறுத்தம் உள்ளது. அந்த இடத்தில் எங்கள் ஊர்காரர்கள் மது அருந்திவிட்டு

போட்டிருந்த காலி பாட்டில்கள் கீழே கிடந்தது. 1, 2 எதிரிகளும், மற்றொரு நபரும் சாமி ஊர்வலத்திலிருந்து ஓடி வரும் போது எங்கள் ஊர்காரர்களுடன் என் தம்பி நாகேந்திரனும் சேர்ந்து அவர்களை துரத்திக் கொண்டு சென்ற போது பேருந்து நிழற்குடை அருகில் 1, 2 எதிரிகளும், அவர்கள் ஊரை சேர்ந்த மற்றொரு நபரும் போதையில் அங்கே கீழே கிடந்த காலி மதுபாட்டில்களை எடுத்து தரையில் உடைத்து என் தம்பி நாகேந்திரனின் பின் கழுத்தில் குத்தினார்கள். பேருந்து நிழற்குடைக்கு உள்ளே என் தம்பி நாகேந்திரன் இருந்ததால் எதிரிகளிடமிருந்து தப்பி வர முடியவில்லை. என் தம்பி நாகேந்திரனுக்கு கழுத்தில் இருந்து ரத்தம் அதிகளவில் வெளியில் வந்துவிட்டது. நானும் அந்த இடத்தில் தான் இருந்தேன். எங்கள் ஊரை சேர்ந்த ரகுவரனுக்கும் அந்த சண்டையில் அவரது கையில் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட என் தம்பி நாகேந்திரனை இராணிப்பேட்டை எஸ்.எம்.எச் மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு சென்றோம். எங்கள் ஊரை சேர்ந்த ராமதாஸ் மற்றும் ஹேமகுமார் ஆகிய இருவரும் என் தம்பியை மருத்துவமனையில் சேர்த்தார்கள். என் தம்பியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். நான் அப்போது மருத்துவமனைக்கு வெளியில் இருந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u> இல்லை

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District & Sessions Judge,
Ranipet.